**அகலவத்த பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 28 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூன் 30 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அகலவத்த பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய காகிதாதிகளை கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 514,460 தொகையினை இருப்புக் கணக்கில் வரவு வைப்பதற்குப் பதிலாக ஆண்டின் செலவினமாகக் கணக்குகளில் காண்பிக்கப்பட்ட காரணத்தால் வழங்கல் மற்றும் உபகரணச் செலவினம் ரூபா 514,460 இனால் அதிகரித்தும் வழங்கல் உபகரண இருப்புக் கணக்கு ரூபா 514,460 இனால் குறைத்தும் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2014 இன் கணக்காய்வு அறிக்கையின் 2.2.1(உ) இன் பிரகாரம் சுட்டிக்காண்பிக்கப்பட்ட பிழைகளைத் திருத்துவதற்காக கடன்கொடுத்தோர் கணக்கு ரூபா 99,745 இனால் வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதியம் அப்பெறுமானத்தால் செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், நாட்குறிப்பு பதிவு 08 இன் மூலம் திரண்ட நிதியக் கணக்கு ரூபா 99,745 தொகை வரவு வைத்து அக்கணக்கில் செலவு வைக்கப்பட்டமையின் காரணமாக கடன்கொடுத்தோர் கணக்கு ரூபா 99,745 இனால் அதிகரித்தும் திரண்ட நிதியக் கணக்கு ரூபா 99,745 இனால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்குரிய மூலதன மானியம் ரூபா 7,273,757 தொகை மற்றும் மூலதனச் செலவினம் ரூபா 7,273,757 தொகை என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்குரிய உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கடன் வட்டி ரூபா 90,988 தொகை மற்றும் மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய வட்டி ரூபா 560,334 என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 556,160 பெறுமதியான கணனி இயந்திரத்தின் பெறுமதி மூலதனச் செலவினமாக வருமானச் செலவினக் கணக்கில்

காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், வழங்கல் மற்றும் உபகரணச் செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

(அ) 08 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 54,470,927 ஆக இருந்ததுடன் பட்டோலையின் பிரகாரம் மீதி ரூபா 51,546,592 ஆகும்.

(ஆ) வேலைக் கடன்கொடுத்தோர் பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் வேலைக் கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 607,945 அக இருந்த போதிலும், பேரேட்டுக் கணக்கின் பிரகாரம் ரூபா 6,167,661 ஆனமையால் ரூபா 5,559,716 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் அந்த வேறுபாட்டிற்கான காரணங்கள் வெளிப்படுத்தப்படவில்லை.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

விரிவான பட்டோலை சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 23,045,625 கூட்டுத்தொகையான 04 கணக்கு மீதிகளையும், மீதி உறுதிப்படுத்தல் பதிவேடு மற்றும் ஆவணங்கள் இன்மையினால் ரூபா 12,885,675 கூட்டுப்பெறுமதியான 02 கணக்கு விடயங்களையும் கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) 2010 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற செலுத்த வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மீதி ரூபா 43,795 மற்றும் பெறுமதி சேர்வரி மீதி ரூபா 754,610 தொகை என்பன மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற பாலிந்தநுவர பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டிய ரூபா 7,543,251 தொகையான மீதி மற்றும் பாலிந்தநுவர பிரதேச சபையிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 5,342,424 தொகையான மீதியை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அகலவத்த பிரதேச சபையின் கணக்கின் பிரகாரம் பாலிந்தநுவர இலிருந்து கிடைக்க வேண்டிய மீதி ரூபா 5,342,424 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அது பாலிந்தநுவர கணக்கின் பிரகாரம் ரூபா 6,862,872 ஆகவும், பாலிந்தநுவரவிற்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 7,543,251 ஆகவும் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், பாலிந்தநுவர கணக்கின் பிரகாரம், அது ரூபா 6,166,759 ஆகக் காணப்பட்டது. பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளை சரியாக்கிக் கொள்வதற்கான மீதிகளை உறுதிப்படுத்தும் கோவைகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள்

இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 396(இ) இன் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 69,658 பெறுமதியான காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,516,651 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 5,277,810 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 நிலுவை வருமானம்

மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுமொத்தமாக ரூபா 1,074,437 தொகையான நிலுவை வருமானம் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 ஆதனவரி

2015 சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 912,926 தொகையான நிலுவை ஆதனவரி மீதியில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 579,205 தொகை அதாவது 63 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

#### 2.2.3 விளம்பர அறிவித்தல்களுக்கான கட்டணம்

2014 நவம்பர் 28 ஆந் திகதிய 1891 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விளம்பர அறிவித்தல்/ 34 பெயர் பதாதைகளுக்காக ரூபா 168,889 தொகையினை அறவிடுவதற்கு 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.4 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,917,958 தொகையானது கீழே குறிப்பிடப்படுகின்ற பிரகாரம் கிடைக்கவேண்டியிருந்தது.

| | **ரூபா** |
|---|---|
| நீதிமன்றத் தண்டப்பணம் | 4,914,424 |
| முத்திரைக் கட்டணம் | 2,003,534 |

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்